சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – பள்ளிக் கல்வி – கருணை அடிப்படை பணி நியமனம் – (லேட்) திரு.S.P.சாதுமெய்யப்பன் என்பவரின் மகன் திரு.S.வின்சென்ட்டேனியல் இளநிலை உதவியாளராக பணி நியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (ப.க.3(2))த் துறை

அரசாணை (3டி) எண்.06

நாள் 12.08.2020
சார்வரி, ஆடி 28
திருவள்ளுவராண்டு 2051
படிக்கப்பட்டவை:–

1. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.45241/ஜே/இ4/2019, நாள் 19.05.2020.
2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள். 01.08.2018.

********

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளக்கிணர், அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து 18.08.2002–அன்று பணியிடைக் காலமான திரு.S.P.சாதுமெய்யப்பன் என்பவரின் மகன் திரு.S.வின்சென்ட்டேனியல் என்பவர் கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு கேட்டு விண்ணப்பித்தார் என்றும், பணியில் இருக்கும் போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரருக்கு, கருணை அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்க, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை நிர்ணயம் செய்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் மனுதாரர் நிறைவு செய்ததன் அடிப்படையில், திரு.S.வின்சென்ட்டேனியல் என்பவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், அரசு மேல்நிலைப் பள்ளியில் 01.07.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாக பள்ளிக் கல்வித் துறையில் பணியமர்த்தப்பட்டார் என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை 01.07.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்தது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, கருணை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட தனியர்களின் பணியினை வரன்முறை செய்ய தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவு பெறத் தேவையில்லை என்பதால், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளக்கிணர், அரசு மேல்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து 18.08.2002–அன்று பணியிடைக் காலமான திரு.S.P.சாதுமெய்யப்பன் என்பவரின் மகன் திரு.S.வின்சென்ட்டேனியல் என்பவருக்கு கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில், பள்ளிக் கல்வித் துறையில் 01.07.2016 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் அப்பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பணி வரன்முறை செய்யலாம் என அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன்முறை செய்யப்படுவதால், அவர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவைகள், ஏதும் இருப்பின், அவற்றை விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார். தனியரது பணி வரன்முறை தொடர்பாக உரிய பதிவுகளை அவரது பணிப்பதிவேட்டில் பதிய வேண்டும் என பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அ.சா.எண். 10442/ட்டி1/2020, நாள் 30.07.2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஜி2) துறையின் அ.சா.எண்.18074/ஜி2/2020, நாள் 06.08.2020-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்
சென்னை–6
தனியர் (பள்ளிக் கல்வி இயக்குநர் வழியாக)
நகல்
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ட்டி1) துறை
சென்னை–9
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (ஜி2) துறை
சென்னை–9
இருப்புக்கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்

17/9/2020
தலைமை ஆசிரியர்,
அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி,
தொண்டாமுத்தூர் (அஞ்சல்),
பேரூர் கல்வி மாவட்டம்,
கோயம்புத்தூர் - 641 109.